Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 5, 2022

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 05, 2022 | ஒளி: 07 கதிர்: 274 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | FREE



## 2/3யை இழந்தது

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கி தவிக்கும் நிலையில், பாராளுமன்றம் இன்று (05) முதன்முறையாக கூடுகின்றது.

இந்நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்துள்ளது. இ.தொ.காவும் அவ்வாறே அறிவித்துள்ளது. விமல் வீரவன்ச உள்ளிட்ட 11 பங்காளிகளும் தனிவழியில் செல்கின்றன.

தொடர்ச்சி P2

# நாடு முழுவதும் ஹூ சத்தம்

**மஹிந்தவின் கால்டனில் கர்ஜனை**

**அப்பாவை அமெரிக்காவுக்கு கூப்பிடவும்**

**பொலிஸ் அதிகாரி மக்களுடன் இணைவு**

**'கோட்டாவை தூக்கி வெளியே போடு'**

**அமைச்சர்கள், எம்.பிக்களின் வீடுகள் முற்றுகை**

நாடளாவிய ரீதியிலுள்ள பல நகரங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிராக, நேற்றைய தினமும் (04) திரண்ட மக்கள், எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை, பல இடங்களில் போராட்டங்கள் உக்கிரமடைந்திருந்தன.

தங்காலையிலுள்ள, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கால்டன் இல்லத்துக்கு முன்பாகத் திரண்ட போராட்டக்காரர்கள், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாரால் தடைகள் போடப்பட்டிருந்த நிலையில், முதலாவது தடையை உடைத்து போராட்டக்காரர்கள் முன்னேறியதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

கால்டன் இல்லத்துக்கு முன்னால் திரண்ட போராட்டக்காரர்கள் மீதும் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் களுத்துறை அலுவலகத்துக்கு முன்னால் திரண்ட போராட்டக்காரர்கள் மீதும் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சில இடங்களில் வீதித்தடைகளை உடைத்தெறிந்து கொண்டு, போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் சென்றனர் என்பதுடன், அமைச்சர்களின் வீடுகளுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படிருந்தன.

தொடர்ச்சி P2



# "வாருங்கள் வந்து வாங்குங்கள்"



தற்போது ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண ஒன்றிணையுமாறு, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நேற்று (04) வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

பல்வேறு பொருளாதார மற்றும் உலகளாவிய காரணிகளால், தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. ஆசியாவின் முன்னணி ஜனநாயக நாடுகளில் ஒன்றாக, ஜனநாயக கட்டமைப்புக்கு உள்ளேயே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

அனைத்து குடிமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக, தேசிய தேவை எனக் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

தொடர்ச்சி P2

# "மக்கள் பக்கம் இருப்போம்"

தற்போதைய தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகிய கட்சிகள் நிராகரித்துள்ளன.

விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று (04) உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, "கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதே பொதுமக்களின் வேண்டுகோள் எனவும் நாங்கள் அந்த போக்கை ஆதரிப்போம் என்றும் ராஜபக்ஷர்களின் கீழ் எந்த பதவியையும் ஏற்க மாட்டோம்" என்றும் தெரிவித்தார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் பதவிக்காலத்தின் கடைசி சில நாள்கள் இது என்று தெரிவித்த அவர், மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எந்த வகையிலும் உதவாது என்றார்.



தொடர்ச்சி P2

## 'கை' வெளியே



ஜனாதிபதிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, நேற்று (04) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சத்தமிட்ட இளைஞன் சாகவில்லை

மிரிஹானவிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு முன்பாக வியாழக்கிழமை (31) முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞரின் மரணம் குறித்து, சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளை இலங்கை பொலிஸ் திணைக்களம் மறுத்துள்ளது.

பொலிஸ் தலைமையகத்தால் நேற்று (04) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ஜோன்ஸ்டன் விளக்கம்

இலங்கையிலுள்ள 69 இலட்சம் மக்களின் ஆதரவு இன்னும் இருப்பதால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நேற்று (04) தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது இராஜினாமாவை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்த அமைச்சர், மக்கள் ஆணையை ஜனாதிபதி இன்னும் வைத்திருப்பதாக தான் நம்புவதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## பிறந்த சிசுவுடன்…

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நாடளாவிய ரீதியில் நேற்றும் (04) இடம்பெற்றன. இந்நிலையில், பிரசவத்தை முடித்துக்கொண்ட தாயும், தந்தையும் பிறந்த குழந்தையை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் படம் சமூக வலைத்தளங்களில் வைரலானது. எனினும், எவ்விடத்தில் வைத்து பிடிக்கப்பட்ட படம் என்பது தொடர்பிலான தகவல்கள் வெளியாகவில்லை.

(சமூக வலைத்தளம்)

## யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் இடைநிறுத்தம்




யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் நாட்டின் தற்போதைய நிலையில் மாணவர்களின் நலன்கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் சி. சிறிசற்குணராசா, நேற்று (04) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கையின் கதியே இங்கும் ஏற்படும்



முழுச் செய்தி P2

## மஹிந்தவுக்கு நோட்டீஸ்

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறு கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்த இரண்டு மனுக்கள் குறித்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 42 பேரை ஏப்ரல் 8ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்புமாறு, உயர்நீதிமன்றம், நேற்று (04) உத்தரவிட்டது.

குறித்த மனுக்கள், நீதியரசர்களான காமினி அமரசேகர, ஷிரான் குணரத்ன, குமுதினி விக்கிரமசிங்க ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உணவு, எரிவாயு, எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர்,

தொடர்ச்சி P2

## நிலையற்ற 'தொங்கு' அமைச்சரவை நியமனம்



முழுமையான அமைச்சரவை நியமிக்கப்படும் வரை, பாராளுமன்றம் மற்றும் நாட்டின் ஏனைய செயற்பாடுகளை சட்ட ரீதியாகவும் நிலையாகவும் பேணுவதற்காக நான்கு அமைச்சர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று (04) முற்பகல் நியமித்தார்.

கொழும்பு, கோட்டை, ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று (04) முற்பகல் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## புதிய அமைச்சரவையை சாடுகிறார் கம்மன்பில

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக அமைச்சரவை புதிய குடுவையில் அடைக்கப்பட்ட பழைய வைன் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கடுமையாக சாடியுள்ளார்.

தற்போது நாட்டுக்கு அனைத்துக் கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கமே தேவைப்படுவதாக தெரிவித்த அவர், புதிதாக நியமிக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட தற்காலிக அமைச்சரவை அல்ல என்றும் குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாடு முழுவதும் ஹூ சத்தம்

தம்புள்ளையிலுள்ள முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் வீடு முற்றுகையிடப்பட்டதுடன், காலியிலுள்ள முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் வீட்டுக்கு முன்பாகவும் போராட்டக்காரார்கள் குவிந்திருந்தனர்.

அனைத்து இடங்களிலும் போராட்டம் இடம்பெற்ற நிலையில், கண்டி மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் பெருந்திரளானோர் போராட்டத்துக்கு வந்தமையை காணக் கூடியதாக இருந்தது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்றதுடன், யாழ். மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பலர், ஜனாதிபதிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியிருந்தனர்.

'வெந்து தணிந்தது காடு, கோட்டாவை தூக்கி வெளியே போடு' என்ற வாசகம் உள்ளிட்ட பல வாசங்களை கொண்ட பதாகைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

கொட்டாவையில் போராட்டக்காரர்கள் வைத்திருந்த ஒலி பெருக்கியை வாங்கிய பொலிஸ் அதிகாரியொருவர், "சீருடை அணிந்திருந்தாலும் நாம் உங்களுடனேயே இருப்போம்" என்றும் குறிப்பிட்டதையடுத்து, போராட்டக்காரர்களிடமிருந்து பலத்த கரகோஷம் எழுப்பப்பட்டது.

விசேட அம்சமாக, பிறந்து ஓரிரு நாள்களேயான சிசுவொன்றுடன், அதன் தாயும் தந்தையும் போராட்டத்துக்கு வந்து வீதியில் நின்ற படமும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இதேவேளை, மீட்டியாகொடவில் மூத்த பிரஜையொருவர், நடுவீதியில் அமர்ந்து தனது எதிர்ப்பை தெரிவித்திருந்தார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள முற்பட்ட ஜனசெத பெரமுனவின் தலைவர் வணக்கத்துக்குரிய பத்தரமுல்லே சீலரதன தேரர் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மகனின் வீட்டுக்கு வெளியே திரண்ட ஆர்பாட்டக்காரர்கள் குழு, அவரது தந்தையை வீட்டுக்கு அழைக்குமாறு கோரியிருந்தனர் என செய்தி வெளியாகியிருந்தது.

# "வாருங்கள் வந்து வாங்குங்கள்"

அதற்காக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டு, தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்றிணையுமாறு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சத்தமிட்ட இளைஞன் சாகவில்லை

மிரிஹான ஆர்ப்பாட்டத்தின் போது, "அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம்" என இராணுவத்தினரிடம் கோரி, பொலிஸாருக்கு எதிராக நின்ற இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சமூக ஊடகங்களில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

போராட்டத்தின் போது பொலிஸாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர், பொலிஸாரின் தாக்குதலில் ஏற்பட்ட காயங்களினால் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டு கொழும்பு தெற்கு (களுபோவில) போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போராட்டக்காரர்கள் அனைவரும் உயிருடன் இருப்பதாகவும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலும் இதுபோன்ற பொய்யான செய்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## 2/3யை இழந்தது

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, மற்றுமொரு குழுவை உருவாக்குகின்றர்.

இவ்வாறான நிலைமையிலான, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கொண்டிருந்த அரசாங்கம் அதன் பலத்தை இழந்து நிற்கின்றது.

## 'கை' வெளியே

அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு, நேற்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

இந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கக் கூட்டமைப்பிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக அமரத் தீர்மானித்து.

அத்துடன், கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் இன்று (05) விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காபந்து அரசாங்கத்தை நியமிப்பதற்கான தமது அழைப்புகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காவிட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோம் என்று கட்சி ஏற்கெனவே எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜோன்ஸ்டன் விளக்கம்

ஜனாதிபதிக்கு இன்னும் மக்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றார்.

தற்போது முன்னெடுக்கப்படும் பொதுப் போராட்டங்கள் சிறிய போராட்டங்கள் என தெரிவித்த அமைச்சர், எனினும் மக்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

## மஹிந்தவுக்கு நோட்டீஸ்

அமைச்சரவை மற்றும் பிற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளனர்.

அமைச்சரவை அமைச்சர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவையின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள், சட்டமா அதிபர் உள்ளிட்ட 42 பேர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## புதிய அமைச்சரவையை...

அத்தியாவிய சேவைகளை வழங்குவதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும் இடைக்கால அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தொடர்பில் மக்களே தீர்மானிப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "பெரும்பான்மையை காண்பித்தால் அதிகாரத்தை வழங்குவேன்"

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காட்டும் எவருக்கும் ஆட்சி அதிகாரத்தை வழங்கத் தயார் எனவும் நாட்டை சீர்குலைக்க விரும்பவில்லை எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் இன்று பிற்பகல் நடைபெற்ற ஆளும் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எம்.பிக்களுடனான கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கெஹலிய, காமினி வீடுகளின் முன் பதற்றம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சர்களுமான கெஹலிய ரம்புக்வெல மற்றும் காமினி லொக்குகே ஆகியோரின் வீடுகளுக்கு முன்பாக பதற்றமான நிலைமையொன்று நேற்றிரவு ஏற்பட்டிருந்தது.

கெஹலியவின் கண்டி வீட்டுக்கு முன்பாக ஒன்றுதிரண்ட போராட்டகாரர்களை விரட்டியடிப்பதற்காக, பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பிலியந்தலையில் உள்ள காமினி லொக்குகேயின் வீட்டுக்கு முன்பாக தீ மூடப்பட்டுள்ளது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டிருந்தது.

# "மக்கள் பக்கம் இருப்போம்"

இதேவேளை, முதலில் கோட்டாபய விலகவேண்டும், நெருக்கடியை நிர்வகிக்கும் பொறிமுறையை நாங்கள் கலந்துரையாடுகிறோம். பின்னர், மக்கள் விரும்பும் அரசாங்கத்தை தெரிவுசெய்வோம்" என, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியின் அழைப்பை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் நிராகரித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் இதுவரையில் ஏற்றுக்கொள்ளாத எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் இடைநிறுத்தம்

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பேராசிரியர் சி. சிறிசற்குணராசாவின் தலைமையில் இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, விடுதிகளிலிருந்து அனைத்து மாணவர்களும் உடனடியாக வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரம் இன்மையால், மின்பிறப்பாக்கிகள் பயன்படுத்தப்படுவதுடன் அவற்றை செயற்படுத்தவும் தற்போது டீசல் இல்லாது போயுள்ள நிலையில் கல்விசார் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.



# நிலையற்ற 'தொங்கு' அமைச்சரவை நியமனம்


கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்தன (சபைத் தலைவர்), வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நெடுஞ்சாலைகள் அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ (ஆளுங் கட்சியின் பிரதம கொறடா), நிதி அமைச்சராக அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் மற்றும் நிதி நடவடிக்கைகள் அமைச்சுப் பதவி மற்றும் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சபைத் தலைவர் மற்றும் பிரதம கொறடா ஒருவரை நியமிக்க வேண்டியுள்ளதால், இந்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவுகின்ற தேசிய சவால்களை தீர்ப்பதற்கு பங்களிக்குமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஜனாதிபதி ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் அவர்களுடன் கலந்துரையாடி நிரந்தர அமைச்சரவை நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு நாடு என்ற வகையில் எதிர்நோக்கும் பொருளாதார சவாலை வெற்றிகொள்வதற்கும் நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் ஒட்டுமொத்த மக்களின் ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

## காங்கிரஸூக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கோரிக்கைக்கு அமைவாக மலையகப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு திட்டமிடுதல், தோட்டத் தொழிலாளி ஒருவரின் நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபாய் மற்றும் ஆசிரியர் உதவியாளர் நியமனம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எம். இராமேஷ்வரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# பதவி விலகி வழி விடுங்கள்




நாட்டு மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு, அவர்களை நிம்மதியாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பு, இந்த அரசாங்கத்துக்கு உள்ளது. இந்தத் தார்மிக பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாதென மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சாளம்பைக்குளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரிஷாட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் பசியாலும் பட்டினியாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் இன்று வீதிக்கு இறங்கி போராடிக்கொண்டிருக்கின்றனர். “எம்மை வாழ விடுங்கள், எமது பிள்ளைகளை வாழ விடுங்கள்” என்ற கோஷமே எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றது. மக்கள் உண்ண உணவின்றி, வாழ்வதற்கு வழியில்லாமல், வேதனையின் விளிம்பில் இருப்பதாலேயே, நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். அவ்வாறான மக்களின் மீது, தங்களுடைய அதிகாரத்தை பிரயோகித்து, அடக்கி, அச்சுறுத்தி, சிறைப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடத்தில் ஏறிய நாள் தொடக்கம், கடந்த இரண்டு வருடங்களாக இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டனர்.

இன்று அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களும் கூட அரசுக்கு எதிராக வீதியில் இறங்கியுள்ளனர். இந்த நிலையில், அரசாங்கம் உடனடியாக தங்களுடைய பதவியிலிருந்து விலகி, நாட்டு மக்கள் விரும்புகின்ற, நாட்டுக்கு நல்லது செய்யக் கூடிய ஓர் ஆட்சியை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும். ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்பு செய்வதன் ஊடாக மட்டும்தான் ஒரு தீர்வைக் காண முடியும் எனவும் தெரிவித்தார்.



## நடுவீதியில் அமர்ந்து முதியவர் எதிர்ப்பு

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், நாடளாவிய ரீதியில் நேற்றும் இடம்பெற்றன. வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோர் போராட்டங்களில் குதித்திருந்தனர். ஆசிரியர் சங்கங்களும் இன்றைய தினம் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும், தாங்கள் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளன.

கடவத்தை பகுதியில் நேற்று (04) இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது, அங்கிருந்த ஒலிவாங்கியை வாங்கிய, சீருடை அணிந்திருந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரியொருவர், “நான் சீருடை அணிந்திருந்தாலும் உங்களுடன் நிற்கின்றேன்” எனக் கூறி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதனிடையே மீட்டியாகொடவில் முதியவர் ஒருவர் நடுவீதியில் அமர்ந்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சியின் ஒத்துழைப்புடன்

## சர்வகட்சி அமைச்சரவையை நியமிக்க வேண்டும்

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுதவாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதோடு, எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்புடன் சர்வகட்சி அமைச்சரவை ஒன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியிலிருந்து நேற்று காலை (04) விலகுவதாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளேன். ஆரம்பத்திலிருந்தே இப்பதவியிலிருந்து விலகுவதற்கே நான்



தீர்மானித்திருந்தேன். இதன்படி நேற்று விலகியிருந்தேன்.

தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வாக எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்புடன் சர்வகட்சி அமைச்சரவை ஒன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படும் அமைச்சரவையைக் கொண்டு தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வை வழங்கி, தேர்தல் ஒன்றுக்கு செல்ல முடியும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் பெரும்பான்மைக்கு முற்றுப்புள்ளி

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 50இக்கும் மேற்பட்டவர்கள் இன்றைய (05) பாராளுமன்ற அமர்வு முதல், சுயாதீனமாகச் செயற்படத் தயாராகி வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இவர்கள் அனைவரும் இன்றைய பாராளுமன்ற அமர்வில் இது தொடர்பில் அறிவிப்புகளை விடுக்க உள்ளதாகவும், இதனால் அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இழக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் பெரும்பான்மையை இழந்து ஆட்சியை வேறொரு கட்சியிடம் கையளித்துவிட்டு, அந்த அரசாங்கத்துக்கு தான் ஆதரவளிக்கத் தயார் எனவும் தெரிவித்த அவர், எந்தவொரு பதவிகளையும் ஏற்காது, வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளாது தங்களது குழுவால் அமைக்கப்படும் அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கப்போவதாகவும் தெரிவித்தார்.



# நிவாரணங்களை வழங்கவும்

நாடு முகங்கொடுத்திருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு தீர்வாக நாட்டு மக்களுக்கு விரைவாக நிவாரணங்களை வழங்க வேண்டுமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதோடு, நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு தாமதிப்பது எதிர்க்கட்சிக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். இதனால் நாட்டை இரத்தக்கடலாக மாற்றக்கூடிய துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் சிலர் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் கருத்துகள் நாட்டு மக்களை மேலும்

> **“மக்கள் பிரதிநிதிகள் வரப்பிரசாதங்களை அனுபவித்துக்கொண்டு சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருவதாக மக்கள் மத்தியில் கருத்தொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்த மக்களும் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக எழுந்துள்ளது**

ஆத்திரமடைய செய்வதாகவும், விவசாயிகளுக்கு தேவையான இரசாயன உரத்தை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் வரப்பிரசாதங்களை அனுபவித்துக்கொண்டு சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருவதாக மக்கள் மத்தியில் கருத்தொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்த மக்களும் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக எழுந்துள்ளதாகவும், எனவே மக்கள் பிரதிநிதிகளுக்கான வரப்பிரசாதங்களை குறைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.









அழகுத்தீவில் புதைந்திருக்கும் அற்புதங்களை கண்டறியும் ஒரு பயணம்






எமது அழகுத்தீவில் இன்னும் அறியப்படாமல் மறைந்து கிடக்கும் பல அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம் இருப்பது திண்ணம். எனவே அவற்றை தேடிக் கண்டுபிடித்து உலகின் பார்வைக்கு கொண்டு வருவதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

**இவ்வாறு இலங்கைத் தீவெங்கும் புதைந்து கிடக்கும் அற்புதங்களை உலகறியச் செய்ய நீங்களும் எம்முடன் இணையுங்கள்.**

நம் நாட்டிற்கே உரித்தான விடயங்களை நீங்கள் காணும் பட்சத்தில் அதனை சிறந்த முறையில் புகைப்படமாகவோ அல்லது குறும் வீடியோவாகவோ எடுத்து **www.oitt.lk/ info@oitt.lk** இணையத்தளத்தில் பதிவேற்றுங்கள்.

Cinnamon HOTELS & RESORTS ஏற்பாட்டில்

இணை அனுசரணை: SO SRI LANKA

படைப்பாக்க தொடர்பாடல் அனுசரணை: DentsuGRANT GROUP

Follow us on our pages: /cinnamonhotels /cinnamonhotels /oittsrilanka

The Sunday Times | Daily FT | Daily Mirror | Keells | SriLankan Airlines | SCOPE CINEMAS




யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால்

# எழுச்சிப் பேரணி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பேரணியாக மாறியது.

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக மாணவர்கள் நேற்று (04) காலை ஜனாதிபதியை வெளியேற கோரி, போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம், பல மாணவர்களின் பங்கெடுப்போடு, பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கிப் பேரணியாகச் சென்றது.

பல்கலைகழகம் முன்பாக ஆரம்பமான பேரணி, பலாலி வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து, அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்தது.

பஸ் நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் மாணவர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து, கஸ்தூரியார் வீதியூடாக , ஸ்ரான்லி வீதியை அடைந்து அங்கிருந்து ஆரியகுள சந்தியை அடைந்து, மீண்டும் பலாலி வீதியூடாக மாணவர் பேரணி பல்கலைக்கழகத்தை அடைந்தது.

அதேவேளை, மாணவர்கள் பேரணியாக ஸ்ரான்லி வீதியூடாக செல்லும் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் முன்பு சில நிமிடங்கள் தரித்து நின்று அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




ஊடகவியலாளர்களால்

## முல்லைத்தீவில் கவனயீர்ப்பு

■ சண்முகம் தவசீலன்

மீரிஹான பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து, முல்லைத்தீவு ஊடக அமையத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களால் முல்லைத்தீவு ஊடக அமையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

கறுப்புக் கொடிகளை பறக்க விட்டும் கண்டனங்களை வெளிப்படுத்தும் பதாகைகளை தாங்கியவாறும் முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் இந்தக் கவனயீர்ப்பை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மீரிஹான வீட்டின் முன்னால், கடந்த மாதம் 31ஆம் திகதியன்று போராட்டமென்று முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அறிக்கையிடலுக்காகச் சென்ற தென்பகுதி ஊடகவியலாளர் பலர் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் ஆகியோரின் தாக்குதலில் காயமடைந்துள்ளதோடு, நான்கு ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மேற்படி கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு, இந்தத் தாக்குதல் நடவடிக்கையை கண்டித்து முல்லைத்தீவு ஊடக அமையத்தினரால், 'எமது சகோதர ஊடகவியலாளர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம்' எனும் தலைப்பில் கண்டன அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகம் குறித்து

## மன்னாரில் கலந்துரையாடல்

■ லெம்பர்ட்

மன்னார் மாவட்டத்தில் தடைகள் இன்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று (04) காலை இடம்பெற்றது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி, உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்தார்.

அரச, தனியார் போக்குவரத்து சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பு, பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கல் அமலாக்கப்பட்டுள்ள நிலையில், தேவையான எரிபொருட்களை சகல தரப்பினருக்கும் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

த.தே.கூ ஒருங்கிணைப்பு

## கூட்டத்தை கூட்டவும்

### டெலோ வலியுறுத்தல்

■ க.அகரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், நீண்டகாலமாக இடம்பெறாமையால் உடனடியாக இன்றைய தினம் (05) கூட்டத்தைக் கூட்டுமாறு டெலோ வலியுறுத்தியுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு, டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று (04) அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், தற்போதைய நாட்டு சூழலை கருத்தில்கொண்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான

## கொல்களம் முற்றுகை

### ஒருவர் கைது; மாடு மீட்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத கொல்களம், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு, 50 கிலோகிராம் இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மாடு ஒன்றும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, ஏபி வீதியில் சட்டவிரோதமான முறையில் கொல்களம் இயங்கி வருவதாகவும், மாடுகளை திருடி வந்து அங்கு கொலை செய்யப்பட்டு, இறைச்சியாக்கி விற்கப்படுவதாகவும் யாழ்ப்பாண பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

**“ யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, யில் சட்டவிரோத கொல்களம் இயங்கி வருவதாகவும், மாடுகளை திருடி வந்து, இறைச்சியாக்கி விற்கப்படுவதாகவும் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது**

தகவலின் அடிப்படையில் குறித்த இடத்தை சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு நின்ற 42 வயது நபரை கைது செய்ததுடன், அவரிடம் இருந்து 50 கிலோ கிராம் நிறையுடைய மாட்டிறைச்சியையும் கைப்பற்றினர்.

அத்துடன், கொலை செய்வதற்காக அங்கு கட்டப்பட்டிருந்த மாடு ஒன்றையும் பொலிஸார் உயிருடன் மீட்டதுடன், மாடுகளை கொலை செய்து இறைச்சி ஆக்குவதற்கான ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நபரை, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்குப் பல்கலைக்கழக

# மாணவர்கள் கொந்தளிப்பு

### தீப்பந்தப் போராட்டம் நடத்தி, பேரணி சென்றனர்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன், பேரின்பராஜா சபேஷ், நூருல் ஹுதா உமர்

அரசின் பொருளாதார கொள்கைக்கு எதிராகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு கோரியும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று (04) காலை ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் விவசாய பீடம் அமைந்துள்ள தொகுதியின் நுழைவாயிலில் ஆரம்பமான பேரணி, கொம்மாதுறை - திருவள்ளுவர் வீதியூடாக சென்று, மட்டக்களப்பு - திருமலை வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை பிரதான வளாகம் வரை சென்றது.

பிரதான வீதியில் ஒன்றுகூடிய மாணவர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம், உணவு இல்லை, எண்ணெய் இல்லை, மின்சாரம் இல்லை, கேஸ் இல்லை, பொருட்களின் விலை, வரிச்சுமைகளை குறையுங்கள், மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் போன்ற கோஷங்களை எழுப்பினர்.

அதேவேளை, நேற்று முன்தினம் (03) இரவு 7 மணியளவில் தீப்பந்தம் ஏந்தி, அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் எதிர்ப்புத் தெரிவித்து, சுமார் ஒரு மணித்தியாலம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சமன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, அங்கு பயிலும் ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரமுள்ள செங்கலடிச் சந்திக்கு மாணவர்கள் தீப்பந்தங்களுடன் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டபொழுது, பல்கலைக்கழக வாசலில் வைத்து மாணவர்களை, பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.





### பாவநாச தீர்த்தம்

தெட்சண கைலாயம் திருக்கோணேஸ்வர் கோவில் வருடாந்த உற்சவத்தின் 18ஆம் நாள் தீர்த்த உற்சவம், பாவநாசத் தீர்த்தக் கரையில் நேற்று (04) காலை நடைபெற்றது.

(படங்கள்: அ. அச்சுதன்)

## மைதானம் புனரமைப்பு




■ எம்.எம்.அஹமட் அனாம்

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நேற்று (04) திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான நசீர் அஹமட்டின் முயற்சியால் ஓட்டமாவடி மஜ்மாநகர் பொது விளையாட்டு மைதான புனரமைப்பு ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதி திட்ட பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், பிரதேச சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எம்.ஹாசிம், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மஜ்மாநகர் பொது விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

வீடு புகுந்து மூதாட்டியின்

## காதுகளை துண்டாடி நகை அபகரிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், பசரிச்சேனை பிரதேசத்தில் வீடு புகுந்து 70 வயது மூதாட்டியின் இரு காதுகளையும் துண்டாக்கி, தங்க நகை அபகரிக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியின் கணவர் வீட்டை விட்டு வெளியில் சென்ற சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் சனிக்கிழமை (02) மாலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மூதாட்டி, ஆபத்தான நிலையில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

20ஆவது திருத்தத்துக்கு

## கை தூக்கியோரும் பொறுப்புக் கூறவும்

### இம்ரான் எம்.பி காட்டம்

■ அஸ்லம் மௌலானா, ஒலுமுதீன் கியாஸ், ஹஸ்பர், எப்.முபாரக்

ஜனாதிபதியின் தூர நோக்கற்ற செயற்பாடுகளாலேயே நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு 20ஆவது திருத்தத்துக்கு கைதூக்கிய அனைவரும் பொறுப்புக் கூற வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (040 வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

அரசமைப்பின் 20ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தை அவர் தன்னிச்சையாகப் பயன்படுத்தியதாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவர்கள் திடீரென தடம் மாறியமைக்கு காரணம் என்ன, அரசோடு இவர்களுக்குள்ள டீல் என்ன என்பது குறித்தெல்லாம் மக்கள் நன்கு விளங்கி வைத்துள்ளார்கள் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மலையகத்திலும் ஆர்ப்பாட்டங்கள்...

அரசாங்கத்துக்கு எதிராக நேற்றும் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மலையகத்தின் சில முக்கிய நகரங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக ஹட்டன், நுவரெலியா, பொகவந்தலாவை, மாத்தளை உள்ளிட்ட பிரதான சில நகரங்களில் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

( மலையக நிருபர்கள்)

















# இ.தொ.கா இன்று இறுதி

அரசாங்கத்தில் இருந்து விலகுவதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருந்தாலும், இறுதி முடிவை இன்று (05) அறிவிக்கவுள்ளது என காங்கிரஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எம். ராமேஷ்வரன் ஆகிய இருவர் மட்டுமே இருக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மார்ச் 23ஆம் திகதியன்று நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்திருந்த இ.தொ.கா, அரசாங்கத்துடன் பேசுவதில் எவ்விதமான அர்த்தமும் இல்லையென்றும், அதிரடியான தீர்மானங்களை அறிவிப்போம் என்றும் எச்சரித்திருந்தது.

இந்நிலையில், சனிக்கிழமை (02) நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், அரசாங்கத்தில்



இருந்து விலகப் போவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதன்பின்னர், பாராளுமன்றம் இன்று (05) கூடவுள்ளது. அன்றைய (02) அறிவிப்பு தொடர்பில் இன்றைய தினமே இறுதி செய்யப்பட உள்ளதாக காங்கிரஸ் தரப்பு தகவல்கள்



தெரிவிக்கின்றன.

அரசாங்கத்திலிருந்து விலகி எதிரணியில் அமர்ந்துகொள்வதா? அல்லது அரசாங்க பக்கத்தில் சுயமாக இயங்குவதா? என்பது தொடர்பிலேயே இன்றையதினம் இறுதி செய்யப்படவுள்ளது.

## தேசிய பாடசாலையின்

# சித்திரக் கண்காட்சி

ஹட்டன், ஹைலண்ட்ஸ் தேசிய கல்லூரியின் மாணவர்களால் வரையப்பட்ட சித்திரக் கண்காட்சி, ஹட்டன்-டிக்கோயா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால், இக்கண்காட்சி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்ததுடன், மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் முகமாகவே, இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.



## தூர இடங்களுக்கான பஸ்கள் இன்மையால்

# பயணிகள் அவதி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கடந்த 2ஆம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று (04) காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ள நிலையில், ஹட்டனிலிருந்து தூர இடங்களுக்கான தனியார் பஸ்கள், சேவையில் ஈடுபடாமையால் பயணிகள் அசௌகரியத்துக்கு உள்ளாகினர்.

டீசல் பிரச்சினை காரணமாக, அதிகமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தாலும் அவை போதுமானளவு சேவையில் ஈடுபடவில்லை என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

ஹட்டனில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்றும் நீண்ட வரிசை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஒரு வாரத்துக்குப் பின்னர்

# ஹட்டனுக்கு டீசல்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஒரு வாரத்துக்குப் பின்னர், ஹட்டன் சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற டீசலானது, பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நுகர்வோருக்கு வழங்கப்பட்டது.

இதற்கமைய ஹட்டன் சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6,600 லீற்றர் எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளை ஏற்றிக்கொண்டு எரிபொருள் கூட்டுதாபனத்துக்குரிய பவுசர் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் வருகை தந்த போது, வரிசைகளில் நின்ற மக்களுக்கும் வரிசைகளில் நிற்காமல் வெளியில் இருந்து வந்தவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து ஹட்டன் பொலிஸார் தலையிட்டு டீசல் விநியோகத்தை சுமூகமாக முன்னெடுத்தனர்.

அத்துடன் வாகனங்களுக்கான டீசல் மட்டுப்படுத்தப்பட்ட அளவே விநியோகிக்கப்பட்டதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



# கண்டி நகர் எங்கும் கறுப்பு கொடிகள்

■ சேஹ்ன் செனவிரத்ன

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தர கோரி, கண்டி நகர் எங்கும் நேற்று (4) கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட வர்த்தக சங்கங்கள் பல இணைந்து, இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் இவ்வாறு கருப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

கண்டி சட்டத்தரணிகள் சங்கம், சிங்கள வர்த்தக முன்னணி, முஸ்லிம் வர்த்தக சங்கம், தமிழ் வர்த்தக சங்கம், மத்திய மாகாண வணிக மற்றும் தொழிற்சாலை



சபை உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள், அமைப்புகள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அத்துடன், இன்றைய தினம் கறுப்பு கொடிகளுடன் ஜோர்ஜ். ஈ.டீ.சில்வா மைதானத்தில் எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட உள்ளதாக வர்த்தக சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## ஹட்டன் நகரில்

# குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

■ சுதத்.எச்.எம்.ஹேவா


ஹட்டன் நகரில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டால் பிரதேசவாசிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது, ஹட்டன் நீர் வழங்கல் சபையால் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவையே குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாகவும், இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை குடிநீர் விநியோகிக்கப்பட்டாலும் அது உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுவதில்லை என்றும் நள்ளிரவு அல்லது அதிகாலை வேளையிலேயே குடிநீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், ஹட்டன் நீர்வழங்கல் சபையால் விநியோகிக்கப்படும் நீர் வருவதற்கு முன்னர், குழாய்களில் காற்று நிரம்பவதாகவும் இதனால் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் நீர்மானி வேகமாகச் சுற்றுவதால் நீர் கட்டணம் அதிகரிப்பதாகவும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நீர்வழங்கல் சபையின் அதிகாரியொருவரிடம் வினவியபோது, தற்போது குறித்த பிரதேசத்தில் நிலவும் வரட்சியுடனான வானிலையால் ஹட்டன் பிரதேச மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகமே முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக, ஹட்டன் பிரதேசத்துக்கு நீரை விநியோகிக்கும் சிங்கமலை, ஒட்டரி ஆகிய குளங்களின் நீர்மட்டம்



குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாகவே, மக்களுக்கு உரிய முறையில் நீரை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் இரவு, பகல் பாராது நீர்வழங்கல் சபையின் அதிகாரிகள் மக்களுக்கு தேவையான நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

# அதிகார பலத்தில் குளிர்காய நினைக்கும் அயோக்கியத்தனம் வேண்டாம்

கூறுபவற்றுக்கு எல்லாம் செவிசாய்த்து, அதனை அச்சொட்டாக செய்யவேண்டும் என்றால் அரசாங்கம் தேவையில்லை. ஆனால், செவிசாய்க வேண்டும். இல்லையேல் அதிகாரத்துக்கு கொண்டுவந்த அதேவேகத்தில், கீழே தள்ளிவிடவும் முடியும். அதுதான், நமது நாட்டு அரசியலில் அரங்கேறி கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியையும் முழு அமைச்சரவையையும் பதவிவிலகி வீட்டுக்குச் செல்லவேண்டுமென்ற மக்களின் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில், தற்காலிக அமைச்சரவை மாற்றத்துக்கும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ‘நாயை போகச் சொன்னால்; உண்ணிகள் மட்டும் போய்விட்டன’ என்று எழுதப்பட்ட வாசகத்துடனான பதாகையை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்காது, பிரதமரிடம் வழங்கினால் அது சரியா, இராஜினாமா செய்யாமல் நாடகமொன்று நடத்தப்பட்டுள்ளது என்றெல்லாம் விமர்சிக்கின்றனர். எனினும், நிதி, வெளிநாட்டலுவல்கள், சட்டவாக்கம் ஆகியவற்றுக்கு பங்கம் ஏற்படாத வகையில், ‘தொங்கு அமைச்சரவை’ நியமிக்கப்பட்டுள்ளது.

கடுந்தொனியில் இருந்த பங்காளிகள், ஜனாதிபதியின் அழைப்புக்கு மதிப்பளித்து சென்று, “சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவுறுமாறு” வலியுறுத்தியிருந்தன. அதற்கு தலையசைத்தவர், ‘பழைய மொந்தையில் புதிய கள்’ என்பதற்கிணங்க அமைச்சரவையை மாற்றிவிட்டார்.

ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிராக வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளில், “சொல்வதை செவிசாய்ப்பது இல்லை” என்பது மிகமுக்கியமான குற்றச்சாட்டாகும். அதேபோலதான், நேற்றும் நடந்துகொண்டுள்ளார். தேசிய அரசாங்கத்துக்கான அழைப்பை விடுத்த இரண்டொரு மணிநேரத்தில், தற்காலிக அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அரசாங்கத்துக்கான அழைப்பை விடுத்து, எதிர்க்கட்சிகள், விலகி நிற்கும் பங்காளிகளின் பதில்களை அவதானித்து, இடைக்கால அரசாங்கத்துக்கான யோசனையை முன்மொழிந்த பங்காளிகளை மீண்டும் அழைத்துப்பேசி, மறுநாள் காலையில், தற்காலிக அமைச்சரவையை நியமித்திருந்தால், ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம்.

இதனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிமிர்ந்து நின்ற அரசாங்கம், மூன்றிலிரண்டை இழந்து, தலைத்தொங்கி நின்கின்றது.

தான்தோன்றித்தனமான முடிவுகள், செவிசாய்க்காத நிலைமை, அரசியல் காய்களை நகர்த்தாமல், தீர்மானங்கள் எட்டப்படுமாயின் இருப்பதையும் இழந்து நிற்கவேண்டிய நிலைமையே ஏற்படும். ஏனெனில், ஒவ்வொரு குடிமகனும் வீதிக்கு இறக்கிவிட்டான்.

நிவாரணம் அல்லது பண்டிகை காலத்தில் நிவாரணத்தை பரிசாகக் கொடுத்து ஏமாற்றிய காலைம் மலையேறிவிட்டது. மக்கள் விழித்துக்கொண்டனர். ஒவ்வொருடைய மனங்களிலும் போராட்டக்குணம் விதைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கடல்கடந்து சென்றுவிட்டன.

கடல்கடந்து வந்து தேசிய பாதுகாப்புக்காக அன்று வாக்களித்தவர்கள், “வீட்டுக்குப் போ” என ஏகோபித்த குரலை எழுப்புகின்றனர்.

அதிகாரம் இருக்கிறது என்பதால், மக்களை ஏமாற்றி அதில் குளிர்காய நினைக்கும் அயோக்கியத்தனத்தை கைவிட்டு, நாளைய சந்ததியினரை கருத்திற் கொண்டு முடிவுகளை எடுப்பதே உசிதமானது.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ‘பழைய மொந்தையில் புதிய கள்’

மொஹமட் பாதுஷா

பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கையின் ஆட்சியாளர்கள், மக்கள் எதிர்பார்த்து இருந்ததும் ஆனால், இலகுவில் நடக்கும் என நம்பியிராததுமான ஒரு திருப்புமுனையில் வந்துநிற்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில், எது வேண்டுமென்றாலும் நடக்கலாம். ஜனாதிபதியும் பிரதமரும் அப்பதவிகளில் நீடித்திருப்பார்களா? இடைக்கால அரசாங்கம் அமையப் போகின்றதா? அல்லது, எதுவும் நடக்காத நிலைமை தொடருமா போன்ற கேள்விகளுக்கு இன்றோ நாளையோ விடை கிடைத்துவிடக்கூடும்.

மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய அரசாங்கங்களின் வெற்றியும் ரணில்-மைத்திரி நல்லாட்சியின் தோல்வியும், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் தேர்தல்களில் வெற்றிபெற, மறைமுகமாகப் பங்களிப்புச் செய்தன. இதுதவிர, பயங்கரவாதம், இனவாதம் என்ற இரண்டு பெரும் கருவிகளை ராஜபக்ஷவினர் கையிலெடுத்தனர்.

2019ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்தப்பட்ட அரசியல் பின்னணியுடனான பயங்கரவாதத் தாக்குதலைக் காட்டி, சிங்கள மக்களை அச்சமூட்டியும் ‘தேசப்பற்று’ என்ற தோரணையில் இனவாதம் பேசியும், சிங்கள மக்களின் பெருமளவான வாக்குகளை இவ்வரசாங்கம் பெற்றதை நாமறிவோம்.

அதன்படி, ராஜபக்ஷர்கள் 69 இலட்சம் மக்களின் வாக்குகளையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தையும் 20ஆவது திருத்தம் ஊடான அதிகாரத்தையும் கொண்டவர்கள் என்ற இறுமாப்பில் போட்ட ஆட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஆனால், காலம் வேறு விதி செய்தது. அதாவது, சிறிய சிறிய விடயங்களால், பெரிய நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்கொண்டு, கிட்டத்தட்ட கவிழும் நிலைக்கு வந்து நிற்கின்றது எனலாம்.

கேஸ் சிலிண்டர் வெடிப்பு தொடங்கி, எரிபொருள், எரிவாயு, மின்சார நெருக்கடிகள், அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு-விலையேற்றம் என்பன, அரசியல் கண்ணோட்டத்தில் சிறியதாகத் தோன்றினாலும், இன்று அரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்திருக்கின்றன.

அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் புவிசார் அரசியல் எதிர்பார்ப்புகளும் இதற்குப் பின்னால் இருப்பதாக விடயமறிந்தவர்கள் கூறுகின்றனர். ஆனாலும், மக்கள் வாழ முடியாத அளவுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளே, அரசாங்கத்தை ஆட்டங்காணச் செய்வதற்கான பிரதான காரணிகளாக அமைந்துள்ளன.

கொரோனா வைரஸின் இரண்டாம் அலைக்குப் பிறகு, கோட்டாபய அரசாங்கம், ஆக்கபூர்வமான நகர்வுகளையோ, தீர்மானங்களையோ எடுக்கவில்லை.

பொருளாதார ரீதியாக ஏற்படப் போகின்ற சவாலை, நிதியமைச்சர் பசிலும் மத்திய வங்கி ஆளுநர் கப்ராலும் பார்த்துக் கொள்வார்கள் என்ற தோரணையில் இருந்துவிட்டு, டொலர் நெருக்கடி தலைக்கு மேலால் போன பிறகு, அதன் பாரத்தை மக்கள் மீது சுமத்த முற்பட்டதால், ராஜபக்ஷர்கள் எதிர்பார்த்திராத ஓர் எதிர்வினையை மக்கள் வெளிப்படுத்தி உள்ளனர்.

எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக, நாள்கணக்காக காத்துநின்ற மக்கள், அதற்குக் காரணமான அரசாங்கத்துக்கு எதிராக வீதிகளில் இறங்கியுள்ளனர். இது இலங்கை வரலாற்றில் எந்த ஆட்சியாளரும் எதிர்பார்த்திராத ஓர் எதிர்வினையாகும்.

அரசாங்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டங்கள், எதிர்க்கட்சியாலோ அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவாலோ ஒழுங்கமைக்கப்பட்டதல்ல. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு எல்லா வாய்ப்புகளும் களநிலைமைகளும் சாதகமாக உள்ள நிலையில் கூட, ஆட்சியைப் புரட்டிப் போடத் திராணியற்ற சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க அல்லது, வேறு அரசியல் தரப்பாலோ ஏற்பாடு செய்யப்பட்டவையும் அல்ல.

இது, ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து எழுந்துள்ள அரசாங்கம் மீதான அதிருப்தியின் வெளிப்பாடாகும். இந்த மக்கள் எழுச்சியில், அரசியல் கலப்பு இல்லை என்பதே, மிக முக்கிய பலமாக அமைந்தது எனலாம்.

அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே பொருளாதார நெருக்கடியை சரியாகக் கையாளாதது தவறாகும். ஆனால், அதற்கு அரசாங்கமும் அமைச்சர்களும் மத்திய வங்கி ஆளுநர் போன்றவர்களும் அளித்த வியாக்கியானங்கள், மக்களை மேலும் விசனத்துக்கு உள்ளாக்கும் வகையில், சிறுபிள்ளைத் தனமானவையாக இருந்தன.

இது இவ்வாறிருக்க, மக்களது எதிர்ப்பைக் கையாளும் விடயத்தில், அரசாங்கம் ஓர் இடத்தில் மிகப் பெரிய தவறைச் செய்தது. அது, மிரிஹானவில் ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை, கையாண்ட விதமாகும்.

ஜனாதிபதியை வீட்டுக்கு போகுமாறு கோசமிட்ட மக்களில் ஒரு பகுதியினர், மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் வீட்டுக் கதவடி வரை சென்று, தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவர்கள் தெளிவாகத் தமது நிலைப்பாட்டை, கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள்.

இருப்பினும். ஆர்ப்பாட்டக்காரர்களோ அல்லது இப்போது பாதுகாப்புத் தரப்பு சந்தேகிப்பது போல ‘வெளியில் இருந்து’ வந்தவர்களோ, யாராயினும், அரச சொத்துக்கு சேதம் விளைவித்தமையும் கலவர பூமியாக அதனை மாற்றியமையும் ஏற்றுக் கொள்ள முடியாத குற்றங்களாகும்.

ஆர்ப்பாட்டத்தை ஆதரித்த, மனச்சாட்சியுடன் சிந்திக்கக்கூடிய யாரும் இந்த வன்முறையையோ, அரச சொத்தழிப்பையோ சரி எனச் சொல்லவில்லை. ஆனால், ஆரம்பத்தில் அவ்விடத்திற்கு வந்து கோசம் எழுப்பியர்வர்கள், ஒவ்வோர் இலங்கை பிரஜையின் குரலாகவே ஒலித்தனர் என்பதை மறுக்க முடியாது.

இதையும் தாண்டி, அரசாங்கம் அவர்களைக் கைது செய்ததைக் காட்டிலும், கைதானவர்களை விட அதிக எண்ணிக்கையில் சட்டத்தரணிகள், அவர்களுக்காக ஆஜரானது மக்களுக்கு ஒருபுதுவித உத்வேகத்தைக் கொடுத்தது.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி செயலகம் மறுநாள் விடியற்காலையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. ‘இது ஒரு தீவிரபோக்குடைய குழுவின் நடவடிக்கை; அரபு வசந்தத்தை ஏற்படுத்தும் முயற்சி’ என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது வேறுவிதமான விமர்சனத்துக்கு வித்திட்டது எனலாம்.

ராஜபக்ஷ குடும்பத்தின் கடைநிலை அரசியல்வாதியைக் கூட, விமர்சிக்க அஞ்சுகின்ற மக்கள், இன்று ஜனாதிபதி கோட்டாபயவின் வீட்டுக்கு முன்னாலேயே வந்திருக்கின்றார்கள் என்றால், பிரச்சினையும் மக்களின் மனஅழுத்தமும் எந்தளவுக்கு கடுமையானதாக மாறியிருக்கின்றது என்பதை, அரசாங்கத்தின் மேலிடம் விளங்கிக் கொண்டு, அதன்படி செயற்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு மாற்றமாக, இந்த ஆர்ப்பாட்டத்தை ஒரு தீவிரபோக்குடைய குழுவின் நடவடிக்கையாக வகைப்படுத்தியமை, பரவலாக நாட்டு மக்களிடையே அரசாங்கத்துக்கு எதிரான உணர்வுகளை மேலும் தூண்டிவிடுவதாகவே அமைந்தது.

இதன் பிறகு, அரசாங்கம் என்னசெய்வதென்று தெரியாத தடுமாற்றத்தில், அடுத்தடுத்து பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளை, தவறான முடிவுகளின் அடிப்படையில் எடுத்தது.

மக்கள் போராட்டங்களைக் கட்டுப்படுத்த வழியின்றி, அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியமை, ஞாயிற்றுக்கிழமை (03) ஆர்ப்பாட்டம் நடைபெறவிருந்த நிலையில் அன்றையதினம் ஊரடங்கை அறிவித்தமை, சமூக வலைத்தளங்களை சில மணிநேரம் முடக்கியமை போன்றவற்றை அந்த முட்டாள்தனமான நடவடிக்கைகளாகக் கருதலாம்.

இந்த நடவடிக்கைகள் உண்மையிலேயே, மக்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களது விசனத்தை மேலும் அதிகரிக்கவே வழிகோலின. அத்துடன், மக்கள் எதிர்ப்பைக் கண்டு ஆட்சியாளர்கள் அச்சப்படுகின்றார்கள் என்பதும் வெளிப்பட்டதெனலாம்.

அதன்காரணமாக, ஊரடங்கையும் மீறி கொழும்பு, கண்டி உட்பட நாட்டின் பல பாகங்களிலும் அதிகளவிலான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்தும் மக்கள் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. சமகாலத்தில், 11 சிறுகட்சிகள் உட்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தமது நிலைப்பாட்டை அரசாங்கத்தின் மேலிடத்துக்கு அறிவித்துள்ளது.

எனவே, எதுவும் செய்யாமல் இப்படியே காலத்தை இழுத்தடித்துக் கொண்டு செல்ல முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு ஆட்சியாளர்கள் வந்திருக்கின்றார்கள்.

தற்போதைய நிலையில், அரசாங்கத்தின் முன்னால் சில தெரிவுகள் உள்ளன. அதையும் தாண்டி, இராணுவ ஆட்சி பற்றிய கதைகளும் உள்ளன. இத்தெரிவுகளில் ஒன்றான, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான சமிக்ஞையை பிரதமர் உள்ளிட்ட அநேக எம்.பிக்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம், இப்போது நாடு இருக்கின்ற நிலையில் சஜித்தோ, ரணிலோ துணிந்து நாட்டைப் பொறுப்பேற்கவும் தயாரில்லை.

இந்தப் பின்னணியில், அமைச்சரவை அமைச்சர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை, ஞாயிற்றுக்கிழமை (03) இரவு பிரதமரிடம் கொடுத்துள்ளனர். அப்போது சிலர் முரண்டு பிடித்துள்ளனர். இக்கடிதங்களை பிரதமர், ஜனாதிபதியிடம் கொடுத்ததும் அவர், அவற்றை ஏற்றுக் கொள்வார் என்று சொல்லப்பட்டது. அத்துடன், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக சுமார் 50 எம்.பிக்கள் வரையில் அறிவித்துள்ளனர்.

முழுமையான ஆட்சி மாற்றத்துக்கான வாய்ப்புகள் இல்லை என்றே கருத முடிகின்றது. அத்துடன், ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவும் மாட்டர்கள் என்றே தோன்றுகிறது. எனவே, அமைச்சரவை கலைந்தால், இடைக்கால அரசு உருவாவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும் என்ற நிலை உள்ளது.

ராஜபக்ஷர்களின் அரசாங்கம், கூண்டோடு பதவி விலக வேண்டும் என்றே மக்கள் கோருகின்றனர். இந்நிலையிலேயே, நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தோரணையில் அமைச்சர்கள் இராஜினாமாவும் புதிய அமைச்சர்கள் நியமனமும் நடந்தேறியுள்ளது. எனவே, ஜனாதிபதியும் பிரமரும் பதவி விலகப் போவதில்லை என்பதையே இந்நிகழ்வுகள், மறைமுகமாகச் சொல்லி இருக்கின்றன எனலாம்.

அதாவது, அமைச்சர்கள் இராஜினாமா செய்தமையும் புதிய அமைச்சர்கள் நியமனம் செய்தமையையும் பார்க்கும்போது, ‘பழைய மொந்தையில் புதிய கள்’ என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது.

வீதியில் இறங்கிப் போராடும் மக்களைப் பொறுத்தமட்டில், இதுவும் பத்தோடு பதினோராவது அரசியல் நாடாகமாகத்தான் வந்து முடிகிறது.



## வாழ்வியல் தரிசனம்

நாங்கள் வாழும் வாழ்க்கை முறைகள் எங்களால் ஆக்கப்பட்டவை அல்ல! எங்கள் முன்னோர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, தங்கள் பரம்பரைக்கு வழங்கிய நெறிமுறைகள் ஆகும்.

காலங்கள் பல வரலாறுகளைச் சொல்லியபடியே இருக்கின்றன. எனவே, அடுத்த பரம்பரைக்குக் கட்டாயம், ஒழுக்கங்களையும் வாழ்வியல் முறைமைகளையும் சொல்லி வளர்க்க வேண்டும்.

தங்கள் நாடு, ஊர்களை வளம்படுத்த ஈடுஇணையற்ற தியாகங்களை, எமது முன்னோர்கள் செய்திருப்பார்கள். இவற்றை உணர்வீர்களாக!

போர்கள், அதிகார மோகத்தால் ஏற்படும் பின்னடைவுகள், இயற்கை அழிவுகள் எனப் பலவற்றுக்கு முகம்கொடுத்தும் அவற்றால் பாதிக்கப்பட்டுமே முன்னேறினார்கள். தமது வாழ்வியல் அனுபவங்களை, எமக்கு வழிகாட்டும் பொக்கிஷங்களாக கல்வெட்டுகள், செப்பேடுகள், சுடுமண்தாழிகள், ஏடுகள் என்பவற்றில் பதிவுகளைச் செய்து, எமக்கு வழங்கியுள்ளார்கள்.

பழைமையை மறத்தல் என்பது நன்றி கெட்ட செயல்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானை தொல்லையால் விரக்தியின் விளிம்பில் விவசாயிகள்

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகனேசபுரத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை, காட்டு யானைகள் புகுந்து, தென்னை மரங்கள், தோட்டப்பயிர்கள், வீடு என்பனவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால், இப்பிரதேசத்தில் வதியும் மக்கள், உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்துக்குள் வரும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த, நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளாமையால், தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியவில்லை எனவும் கடந்த மாதமும் குறித்த பகுதிக்கு வருகை தந்து, பயிர்களையும் வீடுகளையும் சேதப்படுத்தி சென்றுள்ளதாகவும் பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதமும் யானைகள், விவசாய வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்திய நிலையில், நாட்டின் விலை ஏற்றத்துக்கு முகம்கொடுத்து, பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அவற்றைச் சீர்செய்து, பராமரித்து வந்த நிலையில், மீண்டும் யானைகள் சேதப்படுத்திச் சென்றுள்ளதால், விவசாயத்தைக் கைவிட்டு விட்டு, நஞ்சருந்தி மரணிப்பது மேலென விவசாயிகள் தமது மனக்குமுறலை வெளிப்படுத்துகின்றார்கள்.

எனவே, நிரந்தரத் தீர்வாக, யானை வேலி அமைத்துத் தருவதுடன், விவசாயிகளது உயிர்களையும் பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென, பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

–எம்.எம். அஹமட் அனாம்

ஹொலிவுட் கொப்பியா?

# பீஸ்ட் சர்ச்சை



நெல்சன் இயக்கத்தில், அனிருத் இசையமைப்பில் விஜய், பூஜா ஹெக்டே மற்றும் பலர் நடித்துள்ள 'பீஸ்ட்' திரைப்படத்தின் டிரைலர் இரு தினங்களுக்கு முன்பு வெளியானது. டிரைலர் வெளியான தினத்திலிருந்தே இந்தத் திரைப்படத்தின் கொப்பி, அந்தத் திரைப்படத்தின் கொப்பி எனப் பலரும் சமூக வலைத்தளங்களில் கிண்டலடித்து வருகிறார்கள்.

தமிழில் யோகி பாபு நடித்து வெளிவந்த 'கூர்க்கா', ஹொலிவுட்டில் ப்ரூஸ் வில்லிஸ் நடித்து வெளிவந்த 'டை ஹார்டு' படத்தின் கொப்பி என்று பலரும் சொன்ன நிலையில், மேலும் பல 'ஷாப்பிங் மால்' படங்களைத் தேடி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள்.



அந்த விதத்தில் 2009இல் வெளிவந்த ஹொலிவுட் படமான 'பால் பிலார்ட் - மால் காப்' மற்றும் அப்படத்தின் இரண்டாம் பாகமான 2015இல் வெளிவந்த 'பால் பிலார்ட் மால் காப் 2' திரைப்படத்தின் காட்சிகளைக் கொப்பியடித்திருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இந்த இரு படங்களுமே படத்தின் நாயகன் பால் பிலார்ட்--டின் நகைச்சுவை கலந்த ஹீரோயிசத்தால் ரசிக்கப்பட்டவை.

'பீஸ்ட்' படத்தில் இடம்பெற்றிருக்கும் நகைச்சுவை நடிகர்களான யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, விடிவி கணேஷ், சுனில் ரெட்டி ஆகியோரிடம் பால் பிலார்ட்டின் நகைச்சுவைத் தாக்கத்தை எதிர்பார்க்கலாம் என்கிறார்கள்.



# மாளவிகா ரீ-என்ட்ரி

தமிழில் 1999ஆம் ஆண்டு சுந்தர். சி இயக்கத்தில் அஜித் நடித்த உன்னை தேடி என்ற படத்தில் அறிமுகமானவர் மாளவிகா. அதைத் தொடர்ந்து ஆனந்த பூங்காற்றே, ரோஜாவனம், சந்திரமுகி, வெற்றிக்கொடி கட்டு என பல படங்களில் நடித்தார். 2007ஆம் ஆண்டு சுரேஷ் மேனன் என்பவரை திருமணம் செய்து கொண்டவர், அதன் பிறகு திரைப்படங்களில் நடிக்கவில்லை.

இந்நிலையில், தற்போது தன்னை தமிழில் அறிமுகம் செய்த சுந்தர். சி இயக்கி வரும் புதிய திரைப்படத்தின் மூலம் ரீ என்ட்ரி கொடுக்கிறார் மாளவிகா. இந்தத் திரைப்படத்தில் மங்கம்மா என்ற கேரக்டரில் நடிக்கும் மாளவிகாவுக்கு ஜோடியாக டைரக்டர் மனோபாலா நடித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும், இத்திரைப்படத்தில் ஜீவா, ஸ்ரீகாந்த், ஜெய் என மூன்று ஹீரோக்கள் நடிக்க, அவர்களுக்கு ஜோடியாக அமிர்தா ஐயர், ரைசா வில்சன், ஐஸ்வர்யா தத்தா ஆகியோர் நடிக்கிறார்கள். தற்போது இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பில் மாளவிகா கலந்துகொண்ட புகைப்படம் ஒன்றை பகிர்ந்துள்ளார் மனோபாலா.



# 800 கோடி வசூலில் "ஆர்.ஆர்.ஆர்"

ராஜமவுலி இயக்கத்தில் ஜூனியர் என்டிஆர், ராம்சரண், ஆலியா பட் மற்றும் பலர் நடித்த 'ஆர்.ஆர்.ஆர்' திரைப்படம், கடந்த மாதம் மார்ச் 25ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியானது. படம் வெளியான பத்து நாள்களுக்குள் பல சாதனைகளைப் படைத்துள்ளது.

தெலுங்கில் மட்டும் இப்படம் 200 கோடி வசூலையும், உலகளவில் 800 கோடி வசூலையும் கடந்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. தெலுங்கில் இதுவரையிலும் அதிக வசூலைப் பெற்ற படமாக 'பாகுபலி 2' படமாக 204 கோடியுடன் முதலிடத்தில் இருந்தது.

தற்போது அந்த வசூலை 'ஆர்ஆர்ஆர்' கடந்து, 210 கோடியைப் பெற்றுள்ளதாம். இவை 'ஷேர்' தொகை மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. மொத்த வசூல் 275 கோடியைத் தாண்டியுள்ளதாம்.

கர்நாடகாவில் ஏற்கெனவே 50 கோடி வசூலை இத்திரைப்படம் கடந்துள்ளது. தமிழகத்தில் விரைவில் 50 கோடி வசூலைக் கடந்துவிடுமாம். தென்னிந்திய மாநிலங்களில் கேரளாவில் தான் குறைவாக 15 கோடியை வசூலித்துள்ளது. ஹிந்தியில் 165 கோடி வசூலைக் கடந்துள்ளதாம். வெளிநாடு வசூலும் 150 கோடியைக் கடந்துள்ளதாக டோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'பாகுபலி 2' வசூலை மற்ற இடங்களில் இப்படம் முறியடிக்கிறதோ இல்லையோ, தெலுங்கில் முறியடித்துள்ளது குறித்து படக்குழு மகிழ்ச்சியில் இருக்கிறதாம்.



மும்பையில்

# சொந்த வீடு வாங்கிய சமந்தா



தமிழ் நடிகையான சமந்தா, தெலுங்கு திரைப்படங்களில் நடித்தபோது நாகசைதன்யாவுடன் காதல் ஏற்பட்டு, 2017ஆம் ஆண்டு அவரை திருமணம் செய்து கொண்டார். ஆனால், நான்கு ஆண்டு திருமண வாழ்க்கைக்கு பிறகு அவர்கள் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் தாங்கள் விவாகரத்து செய்யப் போவதாக அறிவித்தார்கள்.

மேலும், ஏற்கெனவே 'தி பேமிலி மேன்-2' வெப்சீரிஸ் மூலம் ஹிந்தி ரசிகர்களுக்கு அறிமுகமாகி இருந்தார் சமந்தா. அதையடுத்து அல்லு அர்ஜுனின் புஷ்பா படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடி பொலிவுட்டில் பேசப்பட்டார்.

இந்நிலையில் தற்போது ஹிந்தியில் அதிக படங்களில் நடிப்பதற்கு தீவிரம் காட்டி வரும் சமந்தா, இதுவரை மும்பையில் வாடகைக்கு வீடு பிடித்து தங்கி இருந்தவர் தற்போது மும்பை கடற்கரை பகுதியில் மூன்று கோடி மதிப்பில் ஒரு வீடு வாங்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனால் ஹைதராபாத்தை தொடர்ந்து அடுத்தபடியாக மும்பையில் குடியேறி விடுவார் என்றும் கூறப்படுகிறது.

புதுடெல்லி

# மக்களவையில் தி.மு.க வெளிநடப்பு

## நீட்டிலிருந்து தமிழகத்தை விலக்குமாறு கோரிக்கை

நீட் விலக்கு சட்டமூலத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல், காலம் தாழ்த்திவரும் ஆளுநரைக் கண்டித்து, தி.மு.க எம்.பிக்கள் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு நேற்று (04) நடைபெற்றது. நேற்றுக் காலை வழக்கம்போல, இரு அவைகளும் தொடங்கிய நிலையில், நீட்டிலிருந்து தமிழகத்துக்கு விலக்களிப்பது குறித்து விவாதிக்க மக்களவையில் தி.மு.க எம்.பிக்கள் கோரிக்கை வைத்தனர்.

இது குறித்து விவாதிக்க சபாநாயகர் அனுமதி மறுத்த நிலையில், தி.மு.க எம்.பிக்கள் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

அதேபோல, மாநிலங்களவையில் பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள், அவைத்தலைவர் வெங்கையா நாயுடு இருக்கையை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பியதால் மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.



சென்னை

பஸ்சில் பாலியல் சீண்டல்:


# குண்டூசியால் குத்தி வீடியோ எடுத்த இளம்பெண்

கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து வேலூருக்கு அரசு பஸ்ஸில், 28 வயது இளம்பெண் வக்கீல் ஒருவர் தனது தாயுடன் சென்றார்.

பஸ் புறப்பட்ட சிறிது நேரத்தில், பின்னால் அமர்ந்திருந்த 40 வயது மதிக்கத்தக்க நபர், பாலியல் சீண்டலில் ஈடுபட்டார். பின் இருக்கையில் இருந்தபடியே பெண் வக்கீல் மீது கையை வைத்து அருவெறுக்கத்தக்க வகையில் நடந்து கொண்டார்.

முதலில் கண்டுகொள்ளாத அவர், சீண்டல் எல்லை மீறவே அந்த நபரை எச்சரித்தார். ஆனாலும் அவரது கொட்டம் அடங்கவில்லை. இதனால் ஆவேசம் அடைந்த பெண் வக்கீல், தான் வைத்திருந்த குண்டூசியை எடுத்து, சீண்டலில் ஈடுபட்ட நபரின் விரலில் குத்தியபடியே தனது திறன்பேசியில் வீடியோவாகவும் பதிவு செய்தார்.

பின்னர், இதுபற்றி டிரைவரிடம் முறையிட்டார். பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு அழைப்பை எடுத்து புகார் செய்தார். டிரைவர் அங்கேயே பஸ்சை நிறுத்தினார். உடனடியாக பஸ் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு பொலிஸார் விரைந்து சென்றனர்.



பாதிக்கப்பட்ட பெண்ணிடம் விசாரணை நடத்தினர். பின்னர், பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபரைப் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். பெண் வக்கீல் அளித்த புகாரின் பேரில் அந்த நபரிடம் விசாரணை நடத்தப்பட்டது. பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம், மானபங்கப்படுத்துதல் உள்ளிட்ட சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.

இந்த நிலையில், பெண் வக்கீல் தான் பஸ்சில் எடுத்த குண்டூசி வீடியோவை, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபரின் முகத்தையும் பதிவு செய்து, இவர்தான் அந்த நபர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். பெண் வக்கீலின் இந்தச் செயலுக்கு பல்வேறு தரப்பினரும் சமூக வலைதளங்களில் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

திருப்பூர்

# பெண்களுக்கு அரசியல் மேடை தேவை

கலை என்பது இரசிப்பதற்காக மட்டும் அல்லாமல், வாழ்க்கையின் மகிழ்ச்சி கலையாமல் இருப்பதற்கும் உதவி செய்கிறது என்று தெலுங்கானா ஆளுநர் தமிழிசை தெரிவித்திருந்தார். திருப்பூரில் நிகழ்வொன்றில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றபோதே மேற்படி தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தில் பெண்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதை இந்த மேடை உணர்த்துகிறது. தாய்மார்கள், குழந்தைகளை ஊக்கப்படுத்த வேண்டும். சமையல் மேடை மட்டுமல்ல, நடன மேடை, அரசியல் மேடையும் பெண்களுக்கு தேவை. பெண் குழந்தைகளை ஊக்கப்படுத்த வேண்டும்; மேம்படுத்த வேண்டும். எந்தச் சமூகம் பெண்களுக்கு மரியாதை கொடுக்கிறதோ, அந்தச் சமூகம் சிறந்து விளங்க முடியும் என்றார்.

உடுப்பி

# கத்தியை காண்பித்து காரில் பசு கடத்தல்

கர்நாடக மாநிலம், கார்காலாவில் ஆயுதங்களை காட்டி மிரட்டி, பசுவை காரில் கடத்தி சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆங்காங்கே மாட்டிறைச்சிக்காக மாடுகள், காரில் கடத்தப்படும் சம்பவம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (03) அதிகாலை 2.45 மணியளவில், மாடு ஒன்றை காரில் கடத்த முயற்சித்ததை, அங்கிருந்த சிலர் பார்த்து தடுக்க முயற்சித்தனர். அப்போது கடத்தல்காரர்கள், கத்தியை காண்பித்து மிரட்டி, மாட்டை கடத்தி சென்றனர். இவை அனைத்தும் அங்கிருந்த கண்காணிப்பு கமெராவில் பதிவாகியுள்ளன. வழக்கு பதிவு செய்த பொலிஸார், காரின் பதிவு எண்ணை ஆய்வு செய்த போது, போலி என்பது தெரியவந்தது. பொலிஸார் அலட்சியமாக நடந்து கொள்வதாக, ஹிந்து அமைப்பினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கோவை

# பெண்ணை அரை நிர்வாணப்படுத்தி நாயை ஏவி கடிக்க வைத்தவர் கைது

கோவையில் பெண்ணை அரை நிர்வாணப்படுத்தி கொடுமைப்படுத்தியதை தட்டிக்கேட்ட இளம்பெண் மற்றும் சிறுமியை நாயை கடிக்க வைத்து, ரசித்த பயிற்சியாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்தவர் உதயகுமார். நாய்க்கு பயிற்சி அளிக்கும் பணியை செய்து வருகிறார். மனைவியை பிரிந்து தனியாக வசிக்கும் உதயகுமார், மேற்குவங்கத்தைச் சேர்ந்த திருமணமான பெண்ணுடன் மூன்று மாதங்களாக குடும்பம் நடத்தி வருகிறார்.

இந்நிலையில், சனிக்கிழமை (01) மேற்குவங்கத் பெண்ணை வீட்டுவாசலில் வைத்து அரைநிர்வாணப்படுத்தி அடித்து துன்புறுத்தியுள்ளார். இதைக் கண்ட அப்பகுதி மக்கள் உதயகுமாரை கண்டித்து, அப்பெண்ணை காப்பாற்ற முயன்றுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அவர், வீட்டில் பயிற்சி கொடுத்து வைத்திருந்த நாயை அவர்கள் மீது ஏவி, கடிக்க விட்டுள்ளார். இதில் 20 வயதான நிவேதா, 10 வயது சிறுமி ஆகியோரை நாய் கடித்து குதறியுள்ளது. இருவரையும் மீட்டு, சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தகவலறிந்து சென்ற பொலிஸார் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரித்தனர்.

திருமணமாகி கணவரை பிரிந்து வாழ்ந்த மேற்குவங்கத்தைச் சேர்ந்த அந்தப் பெண்ணை, திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, உதயகுமார் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். வீட்டுக்குள் அடைத்து வைத்து, நிர்வாணப்படுத்தி நாயை கடிக்கவிட்டு ரசித்துள்ளார். இதனால் அந்தப்பெண் அவரிடமிருந்து தப்பித்து, மேற்குவங்கம் செல்ல முயன்றபோது தான், வீட்டுவாசலில் வைத்து தாக்கியதாக அந்தப்பெண் கூறியுள்ளார். அக்கம்பக்கத்தினரிடம் பொலிஸார் விசாரித்தபோது, அந்தப்பெண் தினமும் அலறும் சத்தம் கேட்டு, அச்சத்துடன் வாழ்ந்து வந்ததாகவும், உதயகுமார் வீட்டில் உள்ள நாய்களுக்கு பயந்து யாரும் அவரிடம் கேட்காமல் இருந்ததாக கூறியுள்ளனர். இதையடுத்து உதயகுமாரை பொலிஸார் கைது செய்தனர்.

புதுடெல்லி

# இலங்கை போல் இந்தியாவிலும் நெருக்கடி ஏற்படும்

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் அறிவிக்கப்பட்டுள்ள இலவச திட்டங்களால், இலங்கையில் ஏற்பட்டுள்ளதை போன்ற பொருளாதார நெருக்கடி உருவாகும் என பிரதமர் மோடியிடம் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மத்திய அரசின் பல்வேறு துறை செயலாளர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார். அப்போது, பெரிய வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க புதிய கண்ணோட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என அதிகாரிகளிடம் பிரதமர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், பல்வேறு மாநிலங்களில் அறிவிக்கப்பட்டுள்ள இலவச திட்டங்கள் பொருளாதார ரீதியாக நீடிக்க முடியாதவை. இத்திட்டங்கள் மூலம் இலங்கையில் ஏற்பட்டதை போல் பொருளாதார நெருக்கடி நம் நாட்டிலும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளன என அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

# விடிந்தும் எதிர்ப்பு









அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோதிலும், ஞாயிற்றுக்கிழமை (03) முன்னெடுக்கப்பட்டன. சில இடங்களில் விடிய, விடிய போராட்டங்கள் நடத்தப்பட்டன. விடிந்ததன் பின்பும், நேற்று (04) பரவலாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
























## பேராசிரியர் சந்திரசேகரம் காலமானார்



பேராசிரியர் சோ. சந்திரசேகரம் நேற்று (04) காலை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 77 ஆகும்.

மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது இறுதி கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அன்னாரது மறைவுக்கு எமது திணைக்களத்தின் சார்பில், அவரின் குடும்பத்தினருக்கு ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

## கல்வித்துறைக்கும் நாட்டுக்கும் பேரிழப்பு

### ரவூப் ஹக்கீம் அனுதாபம்



இலங்கையிலும் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் மறைவு பொதுவாக கல்வித் துறைக்கும், நா ட்டுக்கும் பாரிய இழப்பாகும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் முன்னர் கொழும்பு பல்கலைகழக கல்விப் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தது மட்டுமல்லாமல், நாடாளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்சியையூட்டுவதற்கு அயராது பாடுபட்ட ஒருவராக இருந்திருக்கிறார்.

தமிழ் மக்களின் கல்வியில் மட்டுமல்ல,பொதுவாக சிறுபான்மை மக்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் முஸ்லிம்களும் சிறந்து விளங்க வேண்டும் என அவர் மனதார விரும்பினார். இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்திலும், சமூகம் சார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது பங்களிப்பு மகத்தானது.

குறிப்பாக மலையகத்தில் பிறந்தவர் என்ற வகையில் மலையக மக்களைப் பெரிதும் மையப்படுத்தியதாக அவரது எழுத்துகள் இருந்தன. அவர் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி நேர்காணல் செய்யப்படுபவராகவும் இருந்திருக்கிறார்.

அத்துடன், தனிப்பட்ட முறையில் நான் அவருட ன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நான் எழுதிய தந்தை செல்வநாயகம் பற்றிய ஒரு நூலைப் பாராட்டி அவர் எழுதிய கருத்துகளை இன்றும் நான் பெரிதாக மதிக்கின்றேன்.

எந்த விதமான வித்தியாசமும் இன்றி, கல்விச் சமூகத்தினருடன் மட்டுமல்லாது, சாதாரண பொது மக்களுடனும் கூட மனம் விட்டு பழக கூடிய தன்மையை இயல்பாகவே அவர் கொண்டிருந்தார். எந்தவிதமான ஆரவாரமும் இன்றி கல்விப் பணியில் தனது காலத்தை அவர் முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பதிவு செய்கின்றேன்.

## 'பேராசான் சோ.சந்திரசேகரன் எளிமையை கிரீடமாக அணிந்தவர்'

### திலகர் அஞ்சலி



மலையகத்தின் பெருமை மிகு பேராசிரியர் சோ.சந்திரசேகரன், கல்வியியலுக்கு அப்பால் சமூகத்துக்குக் கற்றுக்கொடுத்தது ஆயிரம். அதில் முதலாவது எளிமை; இரண்டாவது இனிமை. இந்த இரண்டோடு இன்னுமொருவரை மலையகத்தில் பேராசிரியராக காணும் காலம் வருமா? எனும் ஏக்கத்தை எம்மிடையே விட்டு எம்மைவிட்டுப் பிரிந்துள்ள அன்னாருக்கு மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் எமது அஞ்சலிகளைப் பதிவு செய்கிறோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

பதுளையில் பிறந்து, அங்கேயே ஆரம்ப கல்வியையும் யாழ்ப்பாணத்தில் இடைநிலைக் கல்வியையும் ஜப்பானிலும் உயர்கல்வியையும் கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தின் பீடாதிபதியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மலையகத்தின் பெருமை மிகு பேராசிரியர் சோ.சந்திரசேகரன், தன் வாழ்நாள் முழுவதும் எளிமையைக் கிரீடமாக அணிந்திருந்தவர்,

அரசியல் கட்சி பேதங்கள் பாராது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி என எல்லாத்தரப்பினருக்கும் தனது அறிவை ஆலோசனையாக அவ்வப்போது பகர்ந்து கொண்டவர். சிந்தனைக் குழாம் உறுப்பினராக இயங்கியவர். மலையகப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டு பல கட்டுரைகளை தர்க்க ரீதியாக எழுதியவர் எனவும் திலகர் தனது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## "ஓடி ஒளியாது வாருங்கள்"

### அழைக்கிறார் சரித்



ஜனாதிபதி ஓடி ஒழியாது நாட்டு மக்களுக்கு பிரச்சினைகள் தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணி சரித் கல்ஹேன, ஜனாதிபதி எங்கே இருக்கிறார் என்பது நாட்டு மக்களுக்கு தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டு மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். நாட்டு மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் நிற்கும் நிலையில், அரசியல்வாதிகள் ஹெலிகொப்டர்களில் பறந்து வருகிறார்கள். மிரிஹான போராட்டத்தின் பின்னர் தனது மகன் எங்கிருக்கிறார் என்பது தெரியாத அம்மா ஒருவர் பேசியதாகவும், அந்த அம்மாவின் கணவர் இராணுவத்தில் பணியாற்றுவதாகவும் கூறினார்.

இதேவேளை காணாமல்போயுள்ள இளைஞரின் மனைவி கர்ப்பமாக இருக்கிறார். இவ்வாறான நிலையில், பாதுகாப்புப் படையில் உள்ள ஒவ்வொருவரும் ஒருநாள் தங்களது சீருடைகளை கழற்ற வேண்டி வரும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். எங்களிடம் அந்த அம்மா கூறும் கதைகள் ஒருநாள் உங்களின் அம்மா கூறும் கதையாக இருக்கலாம்.

பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களை ஏந்தி பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும்போது தங்களது அம்மா, மனைவி, பிள்ளைகள் எல்லோரும் அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் நிற்கிறார்கள். பாதுகாப்புப் பிரிவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் வீட்டை பாதுகாப்பதற்காகவும் இல்லை. நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே பாதுகாப்புப் படையினரின் கடமை எனவும் தெரிவித்தார்.

ஐரோப்பா

# படகு கவிழ்ந்து 100 பேர் பலி



அல்ஜீரியா, லிபியா போன்ற வட ஆப்ரிக்க நாட்டைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றனர். வேலையில்லா திண்டாட்டம், வறுமை, உள்நாட்டுப் போர், சட்டம் ஒழுங்கு சீர்கேடு போன்ற காரணங்களால் இடம்பெயர்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெண்கள், சிறுவர்கள் என 100க்கும் மேற்பட்டவர்களை ஏற்றி கொண்டு மத்திய தரைக்கடல் வழியாக படகு ஒன்று ஐரோப்பாவை நோக்கி சென்றுள்ளது.

திடீரென படகின் இயந்திரம் பழுதடைந்தமையால், அதில் இருந்தவர்கள், நடுக்கடலில் 4 நாள்களாக சிக்கித்தவித்தனர். எதிர்பாராதவிதமாக, படகு கவிழ்ந்துவிட்டது. இதில் 100க்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர், தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சிலரை மட்டும் உயிருடன் மீட்டுள்ளனர்.

காத்மாண்டு



## சீன கடனை ஏற்க நேபாளம் மறுப்பு

சீனாவிடம் அதிக வட்டிக்கு வாங்கிய கடன்களால் சிக்கிக் கொண்ட இலங்கை, பாகிஸ்தான் நாடுகளில் தற்போது அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் பெருந்தொகையைக் கடனாகத் தர சீனா முன்வந்த நிலையில் அதனை ஏற்க நேபாளம் மறுத்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, இலங்கை பாரிய அளவில் பொருளாதார பாதிப்பைச் சந்தித்து வருகிறது. இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அந்நியச் செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நாணயம் பெரிய அளவில் மதிப்பிழந்து விட்டது.

இலங்கை, பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலையை புரிந்து கொண்டுள்ள நேபாளம், பெரும் தொகையை கடனாகத் தர சீனா முன் வந்தபோது, அதனை வேண்டாமென மறுத்து விட்டது.

மார்ச் மாத இறுதியில் சீன வெளியுறவு அமைச்சர் வாங்யின் காத்மாண்டுக்கு வருகை தந்தார். இந்தியாவை தனிமைப்படுத்தி, தெற்காசியாவில் ‘பட்டி ஒன்றும் பாதை ஒன்றும் திட்டத்தை செயற்படுத்தும் சீனா, இதற்காக நேபாளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஹொங்கொங்

## “தேர்தலில் போட்டியிடேன்”



சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட தன்னாட்சி பிரதேசமாக உள்ள ஹொங்கொங்கின் ஜனாதிபதி கேரி லாம் ஆவார். ஹொங்கொங் மக்களை சீனாவுக்கு நாடு கடத்த அனுமதிக்குமாறு 2019 இல் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஹொங்கொங்கில், அரசியல் ஸ்திர தன்மையற்ற நிலை ஏற்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தல், மே. 8ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. எனினும், பதவியில் தொடர போவதில்லை என கேரி லாம் கூறியுள்ளார்.

உக்ரேன்



## சிறுமிகள் துஷ்பிரயோகம்

உக்ரேன் தலைநகர் கீவ் உள்பட பல நகரங்களை கைப்பற்ற ரஷ்யா கடுமையாக போராடி வருகிறது. ஆனால், நாங்களும் சளைத்தவர்கள் இல்லையென உக்ரேன் படை வீரர்களும் எதிர்த்து சண்டையிடுகின்றனர். இதனால் ரஷ்ய படைகளும் திணறி வருகின்றன.

கீவ் புறநகர் பகுதியான புச்சா நகரை ரஷ்யா படைகள் கைப்பற்றினார்கள். இந்த நிலையில் கிழக்கு மற்றும் தெற்கு உக்ரேன் பகுதியில் ஆதிக்கம் செலுத்த ரஷ்யா முழு கவனம் செலுத்தி வருகிறது.

10 வயதுக்குட்பட்ட சிறுமிகளை ரஷ்ய வீரர்கள், பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பெண்களின் உடலில் முத்திரை குத்துவதாகவும் உக்ரேன் பெண் எம்.பி. லெசியா வாசிலென்க், தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

உக்ரேனில் ரஷ்ய வீரர்கள், மக்களை கொள்ளையடித்து, கற்பழித்து, கொன்று வருகின்றனர். “ஒழுக்கமற்ற குற்றங்களின் தேசம்" ரஷ்யா, என்றும் லெசியா வாசிலென்க் கூறி உள்ளார்.

கொக்கி சிலுவை வடிவில் சின்ன தீக்காயங்களுடன் 10 வயது சிறுமிகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. சிறுமிகளின் உறுப்புகள் மற்றும் மலக்குடல் பாதிக்கப்பட்டு உள்ளது. ரஷ்ய ஆண்கள் இதைச் செய்தார்கள். ரஷ்ய தாய்மார்களே அவர்களை வளர்த்தனர். ஒழுக்கக்கேடான குற்றவாளிகளின் தேசம் என்றும் கூறியுள்ளார்.

இஸ்தான்புல்

## துருக்கியும் இணைந்தது



துருக்கியில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவு ஆண்டு பணவீக்கம் 61.14 சதவீதம் உயர்ந்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் மக்கள் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் இலங்கை, பாகிஸ்தான், வெனிசுலா உள்ளிட்ட நாடுகள் பட்டியலில் துருக்கியும் உள்ளது.

அங்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது, கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு முன்பாகவே அங்கு பொருளாதார பாதிப்பு தொடங்கி விட்டது.

லாஸ் வேகாஸ்

## “மௌனம் வேண்டாம்”

உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்து 6 ஆவது வாரத்தை எட்டியுள்ள நிலையில் தங்கள் நாட்டை மௌனத்தைத் தவிர, வேறு எதைக் கொண்டு வேண்டுமானாலும் ஆதரியுங்கள் என்று உக்ரேன் ஜனாதிபதி வொலடிமிர் ஜெலன்ஸ்கி உருக்கத்துடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

64வது கிராமி விருது வழங்கும் நிகழ்வு நடந்தது. இந்த நிகழ்ச்சியில் உக்ரேன் ஜனாதிபதி வொலடிமிர் ஜெலன்ஸ்கியின் பேச்சு அடங்கிய காணொளி ஒளிபரப்பப்பட்டது.

ஐ.பி.எல்:

# சென்னையை வீழ்த்திய பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.


இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னையின் அணித்தலைவர் இரவீந்திர ஜடேஜா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், லியாம் லிவிங்ஸ்டோனின் 60 (32), ஷீகர் தவானின் 33 (24), ஜிதேஷ் ஷர்மாவின் 26 (17) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்டான் 4-0-23-2, டுவைன் பிறிட்டோறியஸ் 4-0-30-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை சார்பாக ஷிவம் டுபே மாத்திரமே 57 (30) ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 18 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களையே பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ராகுல் சஹர் 4-0-25-3, வைபவ் அரோரா 4-0-21-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக லியாம் லிவிங்ஸ்டோன் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரும் மோதவுள்ளன.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## செவிய்யாவை வென்ற பார்சிலோனா

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது. பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை பெட்ரி பெற்றிருந்தார்.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் 69 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்றிட் காணப்படுகின்றது. 57 புள்ளிகளுடன் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள பார்சிலோனாவும், அதே 57 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான அத்லெட்டிகோ மட்றிட்டும், நான்காமிடத்தில் செவிய்யாவும் மற்றைய அணிகளுடனான பெறுபேறுகள் காரணமாகக் காணப்படுகின்றன.



நற்பிட்டிமுனை விளையாட்டுக் கழகத் தொடர்:

## அரையிறுதியில் கல்முனை ஹரிகன்ஸ்

அஸ்ஹர் இப்றாஹீம்

நற்பிட்டிமுனை விளையாட்டுக் கழகம் நடத்தும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த கடினபந்து கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் 20 ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கல்முனை ஹரிகன்ஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.

நற்பிட்டிமுனை எம்.எச். எம். அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கல்லாறு சென்றல் விளையாட்டுக் கழகத்துடனான காலிறுதிப் போட்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு ஹரிகன்ஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஹரிகன்ஸ் விளையாட்டுக் கழகம், முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கல்லாறு சென்றல் விளையாட்டுக் கழகம், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 123 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஹரிகன்ஸ் விளையாட்டு கழகம் 18.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

முதலாவது டெஸ்டில்

## பங்களாதேஷை வீழ்த்திய தென்னாபிரிக்கா

பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், டேர்பனில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் 220 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

தென்னாபிரிக்கா: 367/10 (துடுப்பாட்டம்: தெம்பா பவுமா 93, டீன் எல்கர் 67, சரெல் எர்வீ 41, சைமன் ஹார்மர் ஆ.இ 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 4/92, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/94, எபொடொட் ஹொஸைன் 2/86) பங்களாதேஷ்: 298/10 (துடுப்பாட்டம்: மஹ்முடுல் ஹஸன் ஜோய் 137, லிட்டன் தாஸ் 41, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 38, மெஹிடி ஹஸன் மிராஸ் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: சைமன் ஹார்மர் 4/103, லிஸார்ட் வில்லியம்ஸ் 3/54, டுவன்னே ஒலிவியர் 1/36, வியான் முல்டர் 1/23)

தென்னாபிரிக்கா: 204/10 (துடுப்பாட்டம்: டீன் எல்கர் 64, றயான் றிகெல்டன் ஆ.இ 39, கீகன் பீற்றர்ஸன் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 3/85, எபொடொட் ஹொஸைன் 3/40, தஸ்கின் அஹ்மட் 2/24)

பங்களாதேஷ்: 53/10 (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 7/32, சைமன் ஹார்மர் 3/21)

போட்டியின் நாயகன்: கேஷவ் மஹராஜ்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டால் செவ்வாய்க்கிழமை, 05 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.